கண்வைத்தியநிபுணர்கள்
சிபார்சு செய்யும்
கண்ணாடிகளை
சரியாகக் கொடுப்பவர்கள்
எஸ். எம். பெர்னண்டோ
580, ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி
அருகாமையில்)
யாழ்ப்பாணம்.

பக்கங்கள் எட்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை
ரூ 3/50

S. M. Fernando
OPTICIANS
SIGHT TESTED
PRESCRIPTIONS
ACCURATELY
DISPENSED
580, HOSPITAL ROAD,
(Near Bank of Ceylon)
JAFFNA.

சுடர்: 5 சுக்கில ஹூ தை மீ 26 உ வியாழக்கிழமை ஹிஜ்ரி 1410 ஸபர் பிறை 11 (08 - 02 - 1990) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்: 4

# காங்கேசன் தடுப்பு முகாமிலிருந்து இளைஞர்கள் கட்டம் கட்டமாக விடுவிப்பு

## கராச்சியில் 24 பேர் பலி!

கராச்சி, பெப். 8

பாகிஸ்தானின் பிரதான நகரான கராச்சியில் நேற்று ஏற்பட்ட இனமோதல்களில் 24 பேர் உயிரிழந்தனர் என்று அறிவிக்கப்பட்டது.

ஆர்ப்பாட்டக்காரர்களுடன் பாதுகாப்புப்படையினர் மோதினர். அப்போது இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் பலர் இறந்தனர் என்றும் அறிவிக்கப்படுகிறது. (ஒ-எ)

## வடமராட்சி கிழக்கிலிருந்து அமைதிப் படை வாபஸ்

பருத்தித்துறை பெப்: 8

வடமராட்சி கிழக்குப் பகுதியில் முகாமிட்டிருந்த இந்திய அமைதி காக்கும் படையினர் முற்றாக முகாம்களை மூடிச் சென்றுள்ளனர்.

நாகர்கோவில், தாளையடி, இடைக்காடு ஆகிய இடங்களில் கடந்த இரண்டு வருடகாலமாக முகாமிட்டிருந்த இந்திய அமைதிகாக்கும் படையினர் முகாம்களை மூடிச் செல்கையில் பொதுமக்களிடமிருந்து பெற்றுக்கொண்ட பனைமரம், தகரம், அஸ்பெஸ்டஸ் சீற் என்பவற்றை முகாம்களின் அண்மையிலுள்ள பாடசாலைகளுக்கும் ஆலயங்களுக்கும் வழங்கினர்.

வடமராட்சி கிழக்குப் பகுதியின் பொறுப்பை முற்றா

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## உடுப்பிட்டி முகாமில் வைத்து நேற்று மட்டும் 22பேர் விடுவிப்பு

— அலுவலகச் செய்தியாளர்:- எஸ். ராஜ்குமார் —

யாழ்ப்பாணம், பெப்ரவரி •

இந்திய அமைதிகாக்கும் படையினரால் கைது செய்யப்பட்டு காங்கேசன்துறையில் தடுத்துவைக்கப்பட்டுள்ள இளைஞர்கள் கட்டம் கட்டமாக விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

உடுப்பிட்டி மற்றும் மந்திகை அமைதிப்படை முகாம்களில் வைத்து வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பிரசைகள் குழுவினர் முன்னிலையில் இவர்கள் விடுவிக்கப்பட்டு வருகின்றனர்.

நேற்று மட்டும் காலை 10 மணியளவில் உடுப்பிட்டி அமைதிப்படை முகாமில் வைத்து 22 பேர் விடுவிக்கப்பட்டனர்.

வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவின் சார்பில் திருவாளர்கள் எஸ். செல்வேந்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## வடக்கு, கிழக்கில் இரவு ரயில்சேவை நடத்த திணைக்களம் அனுமதி கோருகிறது

கொழும்பு, பெப் 8

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் இரவு சேவைகளை நடத்த அனுமதி வழங்கும் படி ரயில்வே திணைக்களம் தேசிய பாதுகாப்புச் சபையிடம் அனுமதி கோரியிருக்கிறது.

போக்குவரத்து அமைச்சின் அதிகாரி ஒருவர் இதனைத் தெரிவித்தார்.

1986 ஆம் ஆண்டு மார்ச் மாதத்தின் பின்னர் வடக்கு கிழக்கு மாகாணத்தில் இரவு நேர ரயில் சேவைகள் நடைபெறவில்லை.

இப்போது நிலைமை சீரடைந்து வருவதைத் தொடர்ந்தே மீண்டும் சேவைகளை ஆரம்பிக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ஒ-எ)

## நிறுவை அளவைப் பிரிவு மீண்டும் இயங்க ஆரம்பித்தது

### திங்கள் முதல் முத்திரை இடும் வேலை

யாழ்ப்பாணம், பெப். 8

கடந்த மூன்று வருடங்களாக இயங்காது இருந்த உள்நாட்டு வர்த்தகத் திணைக்கள நிறுவை அளவைப் பிரிவு நேற்று முதல் முந்தி இயங்கிய அதே இடத்தில் இயங்க ஆரம்பித்தது.

வியாபாரிகள், ப. நோ. கூ. சங்கங்கள் தம் தராசுகளுக்கு முத்திரை இடும் வேலைகளை எதிர்வரும் திங்கட்கிழமை முதல் மேற்கொள்ளலாம் என்று திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

கடந்தகால பிரச்சினைகளால் ஐந்து இலட்சம் ரூபா பெறுமதியான திணைக்களத்தின் சொத்துக்கள் காணாமல் போய்விட்டன.

இத் திணைக்களத்தில் இருந்து களவுபோன பொருள்கள் யாரிடமும் இருந்தால்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## சர்வகட்சி மாநாட்டை எதிர்க்கட்சிகள் பகிஷ்கரிக்கும்

கொழும்பு, பெப். 8

ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாச எதிர்வரும் 14 ஆம் திகதி கூட்டவிருக்கும் சர்வகட்சி மாநாட்டைப் பகிஷ்கரிப்பதென முக்கிய எதிர்க்கட்சிகள் முடிவு செய்திருக்கின்றன.

இது தொடர்பாக பிரதான எதிர்க்கட்சியான ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி விரைவில் அறிவிப்பு ஒன்றை விடுக்கும் என கொழும்பில் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை ஐந்து பிரதான எதிர்க்கட்சிகளைக் கொண்ட ஐக்கிய சோஷலிச முன்னணி இந்த மாநாட்டில் பங்குபற்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## வவுனியாவில் சட்டவிரோத மதுபானம் கசிப்பு விற்கத் தடை விதிப்பு

வவுனியா: பெப் 8

அரச அனுமதி பெறுதவர்கள் மதுபானம் விற்பதையும் கசிப்பு காய்ச்சி வடிப்பது குடிப்பது என்பவற்றையும் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி வவுனியாவில் தடைசெய்துள்ளது.

தடையை மீறுபவர்கள் கடுமையான தண்டனைக்கு உள்ளாக்கப்படுவார்கள் என்று வவுனியா நகரிலும் கிராமப்புறங்களிலும் ஒலிபெருக்கி மூலம் புலிகள் அறிவித்துள்ளனர்.

இதனிடையில் களவாக மின்சாரம் பெறுபவர்களுக்கு விடுத்த எச்சரிக்கையைத் தொடர்ந்து கள்ள மின்பாவனை பல இடங்களிலும் குறைந்துள்ளதையும் காண முடிகின்றது. இ-264

## உடனுக்குடன் மின்சார சிட்டை வழங்கும் புதிய திட்டம் வருகிறது

### யாழ். மாநகரசபைப் பகுதியில்

யாழ்ப்பாணம் பெப் 8

மின்பாவனை அளவைப் பதியும்போதே மின்சார சிட்டை வழங்கப்படும்.

இப்புதிய நடைமுறை இம் மாதம் முதல் யாழ் மாநகர சபைப் பகுதியில் நடைமுறைக்கு வந்துள்ளது.

இதுவரை காலமும் மின்பாவனை அளவைப் பதியச் செல்பவர் பாவனை அளவை தன் புத்தகத்தில் குறித்து, மின்மானியுடன் இருக்கும் அட்டையிலும் பதிந்து வருவார். பின் மின்சாரப் பகுதி பாவனையாளர்களுக்கு சிட்டையை அனுப்பும்.

தற்போது நடைமுறைக்கு வந்துள்ள புதிய திட்டத்தின் படி மின்பாவனையை அளவிடச் செல்பவர் மின்மானி அட்டையையும் கொண்டு செல்வார்.

அங்கு மின்பாவனை அளவைப் பதிந்து உடனடியாக முன் நிலுவை, பாவனையின் பெறுமதி, முழுத்தொகை ஆகியவற்றை விளக்கும் மின்சார சிட்டையைக் கொடுப்பார். மின்மானி அட்டையை தன்னுடன் எடுத்துச் செல்வார். பின் பாவனையாளர் மாநகரசபையில் பணம் செலுத்த வேண்டும்.

இந்நடைமுறை மூலம் பாவனையாளர்கள் தம் பிரச்சினைகளை நேரடியாகவே வருபவரிடம் பேசித் தீர்த்துக் கொள்ளலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

ஜனவரி மாதத்துக்குரிய சிட்டை வழங்கும் வேலை கடந்த முதலாம் திகதி ஆரம்பமாகி 15 ஆம் திகதி வரை நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## முச்சந்தி முனி



எதிர்க்கட்சியள் என்றால் அரசு நடத்திறதை எதிர்க்க வேணும் அல்லது பகிஷ்கரிக்க வேணும் எண்டு அச்சொட்டாக் கடைப்பிடிக்கினம் போலை... ...பின்னை...!

## வடமராட்சியில் தனியார் கல்வி நிலையங்கள் மீது கட்டுப்பாடு விதிக்க நடவடிக்கை

### படிப்படியாக ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிப்பு

யாழ்ப்பாணம், பெப். 8

வடமராட்சிப்பகுதியிலுள்ள தனியார் கல்வி நிறுவனங்கள்மீது கட்டுப்பாடுகளை விதிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாடுகள் படிப்படியாக குடாநாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்கப்படும்.

தனியார் கல்வி நிறுவனங்கள் காலைநேர வகுப்புகளை நடத்துவதைத் தடை செய்தல், பாடசாலை நாட்களில் மாலைநேர வகுப்புகள் நடைபெறும் நாட்களைக் குறைத்தல் போன்றவை இவற்றுள் அடங்கும்.

இதுசம்பந்தமாக, தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களுடன் பேச்சுநடத்தி இந்தக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தக் கோருவதுடன், ஏனைய கோட்டக்கல்விப் பிரிவுகளிலும் இந்தக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்தக் கொத்தணி அதிபர்கள், உபஅதிபர்கள் மற்றும் உதவியாளர்களைச் சேருவது எனவும் முடிவு செய்யப்பட்டது.

அண்மையில் பருத்தித்துறை வேலாயுதம் மகாவித்தியாலயத்தில் இடம்பெற்ற கல்வித்துறை சம்பந்தமான கலந்துரையாடல் ஒன்றிலேயே இந்த முடிவுகள் எடுக்கப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில்

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## தீவுப்பகுதி மக்களுக்கு மீளக்குடியமர்வு நிவாரணம்

யாழ்ப்பாணம், பெப். 8

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவைச் சேர்ந்த 3 ஆயிரத்து 681 பேருக்கு மீளக்குடியமர்தல் கொடுப்பனவுகள் மக்கள் வங்கி பிரதானவீதிக் கிளையில் எதிர்வரும் 17, 18, 24 ஆம் திகதிகளில் வழங்கப்படவிருக்கின்றன.

ஜனவரி 22, 26, 29 ஆம் திகதிகளில் வழங்கப்பட இருந்த இக்கொடுப்பனவுகளே மேற்கண்ட திகதிகளில் வழங்கப்பட இருப்பதாக வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன.

17 ஆம் திகதி காரைநகர் (ஜே. 24), ஊர்காவற்றுறை, கரம்பன் (ஜே 89) கிராம சேவகர் பிரிவைச்சேர்ந்த ஆயிரத்து 244 பேருக்கும்; 18 ஆம் திகதி காரைநகர் வடக்கு, காரைநகர் கிழக்கு, காரைநகர் (ஜே 25) கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்து 192 பேருக்கும், 24 ஆம் திகதி கரம்பன் மேற்கு, நாரந்தனை, வேலணை, தீவுப்பகுதி தெற்கு கிராமசேவகர் பிரிவைச் சேர்ந்த ஆயிரத்து 245 பேருக்கும் இக் கொடுப்பனவுகள் வழங்கப்பட இருக்கின்றன. (இ-8)

### சுபநேரம்

8-2-1990
தை-26
வியாழக்கிழமை
சுபநேரம்: 8-05 முதல் 9-35 வரை. ராகுகாலம் 02-5 முதல் 3-35 வரை.
தைப்பூசம்
இன்று பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.

## இந்திய அரசு சில உறுதிகளை அளித்திருப்பதாக வரதர் சொல்கிறார்

சென்னை, பெப் 8

இந்திய அரசாங்கம் இரு உறுதிமொழிகளைத் தமக்கு வழங்கி இருப்பதாக, வடக்கு-கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கைத் தமிழர்களின் நலன்களைப் பேணிக்காக்கவும், வடக்கு-கிழக்கு மாகாண சபைக்கு அதிகாரப் பகிர்வை முழுமையாகச் செயற்படுத்த உதவவும் இலங்கை அரசை தொடர்ந்து வற்புறுத்தவும் தேவைப்பட்டால் நிர்ப்பந்திக்கவும் முயற்சி செய்யப்படும் என்று மத்திய அரசு என்னிடம் உறுதியளித்திருக்கிறது- என்று அவர் சொன்னார்.

திருகோணமலை செல்லும் வழியில் நேற்றுக் காலை திரு. வரதராஜப்பெருமாள் புதுடில்லியில் இருந்து சென்னை வந்து சேர்ந்தார்.

அங்கு செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் மேலும் சொன்னதாவது:-

அதிகாரப்பரவலை முழுமையாக அமுல் செய்வதற்கான நடவடிக்கைகளை விரைந்து மேற்கொள்ளுவது இப்போது இலங்கை அரசின் கைகளில் உள்ளது.

தமிழ்தேசியசபையில் உள்ள

( 8 ஆம் பக்கம் பார்க்க )

## தமிழகம் சென்ற அகதிகள் நடுக்கடலில் கொலை

சென்னை, பெப். 8

கடந்த செவ்வாய் இரவு ஆயுதந் தாங்கிய சிலர் 8 தமிழர்களைப் படுகொலை செய்ததாகவும் 17 பேரைக் காயப்படுத்தியதாகவும் சென்னைக்கு தகவல் வந்திருப்பதாக பி.ரி.ஐ. செய்தி ஒன்று தெரிவித்தது.

யாழ் குடாவில் இருந்து இந்தியாவுக்கு தப்பி ஓட முயன்றதாகக் கூறப்படும் இவர்கள் நடுக்கடலில் வைத்துப் படுகொலை செய்யப்பட்டதாக இச்செய்திகள் கூறுகின்றன.

ஏழு சடலங்களை ஏற்றிக்கொண்டு ஒரு படகு நேற்றுக் காலை ராமேஸ்வரம் கரை வந்து சேர்ந்தது. காயமடைந்தவர்களில் ஒருவர் பின்னர் உயிரிழந்ததை அடுத்து இச்சம்பவத்தில் இறந்தவர்களின் எண்ணிக்கை 8 ஆக அதிகரித்தது.

ஆயுதம் தாங்கிய சிலர் படகுகளில் வந்து இந்த அகதிகளைச் சுட்டுத் தள்ளியதாகக் கூறப்படுகிறது.

இப்படுகொலைக்குக் காரணமானவர்களின் அடையாளங்கள் இச் செய்தியில் வெளியிடப்படவில்லை.

—இப்படி இந்திய வானொலி நேற்று அறிவித்தது: (ஒ-எ)

## யாழ். நகரில் போராளி மரணம்

யாழ்ப்பாணம், பெப்: 8

யாழ்: பழைய பூங்காப் பகுதியில் நேற்று தவறுதலாக துப்பாக்கி வெடித்ததில் போராளி ஒருவர் மரணமானார். (ஒ)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### தேவை

உருக்கு அலுமாரி வேலை செய்வதில் திறமையும் அனுபவமும் கொண்ட வேலையாட்கள் தேவை: நேரில் வரவும். பரமேஸ்வரா எஞ்ஜினியறிங் வேக்ஸ், பருத்தித்துறை வீதி, நல்லூர். (2232)

ரயர் பூட்டிய ஒற்றை மாட்டுவண்டி ஓட்டக் கூடிய வரும் சோடா விநியோகம் செய்யக்கூடியவரும் உடன் தேவை. நகரத்துக்கு கிட்டமானவராக இருக்க வேண்டும். சிவா ஸ்ரோர்ஸ், 179, சிவன்பண்ணை வீதி, யாழ்ப்பாணம். (2257)

தமிழ் ஆங்கில சுருக்கெழுத்து, தட்டெழுத்து கற்பிக்கக் கூடிய திறமை வாய்ந்த ஆசிரியை தேவை. தகைமைச் சான்றிதழுடன் திங்கள் 9.00 - 11.00 மணிக்கு நேரில் வரவும்: Managing Director Bitsmans Institutes Mani, pay. (2455)

### காசாளர் தேவை

பெண் காசாளர் (Lady Cashier) தேவை. நேரில் வரவும்: தர்சகா ரேடேர்ஸ், 85, மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம். (2435)

### உடன் தேவை

யாழ்ப்பாண நகரில் பிரபலமான வர்த்தக ஸ்தாபனத்திற்கு கணக்கு எழுதுவதற்கு ஒருவர் உடன் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். விரும்புவர்கள் விண்ணப்பிக்கவும் 612, C/o உதயன், யாழ்ப்பாணம். (2454)

### WANTED

A Leading institute in Jaffna requires instructors and trainee instructors in computer programming the applicants should have completed a course in basic D base and lotus knowledge in word processing is preferable salary negotiable apply before 29-2-90-614 c/o Uthayan (C/3793)

### வகுப்புகள்

ஆரம்ப பிரெஞ்சு மொழி வகுப்பும், பரதம், பாட்டு, மிருதங்கம், ஓவிய வகுப்புகளும் தைப்பூசநாள் 8-02-90 வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஆரம்பமாகின்றன. தொடர்பு: யாழ் பிரெஞ்சிய நட்புறவுச் சங்கம் Alliance Francaise de Jaffna 130, 1ஆம் குறுக்கு வீதி யாழ்ப்பாணம். (C/3718)

### TYPEWRITERS

Typewriters - Standard Portable தட்டச்சு இயந்திரங்கள் விற்பனைக்குண்டு: சிறந்த முறையில் திருத்தியும் கொடுக்கப்படும் Fudo 39/17 மின்சார நிலைய வீதி, 3ம் ஒழுங்கை (Samy & Co அருகாமையில்) யாழ்ப்பாணம். [சி-3775]

### போட்டோஸ்ரற்

யாழ் பஸ்நிலையத்தில் தங்களின் சகல ஆவணங்களையும் மிகவும் தெளிவாக போட்டோஸ்ரற் செய்து கொள்ள ஸ்ரீ சாந் புத்தகசாலை, 165, மின்சார நிலைய வீதி, பஸ்நிலையம் முன்புறம் யாழ்ப்பாணம். (C/3717)

### ஆங்கில கைநூல்

Practice Makes Perfect Series 1-7 ஆங்கிலத்தில் பேசும் எழுதும் திறமைபெற உதவும் கைநூல்கள். தயாரிப்பு S. B. Iyar கிடைக்குமிடம் 12 (36) வைமன் வீதி, நல்லூர் யாழ்ப்பாணம். (2233)

### Spoken English

புதிய தொடர் வகுப்புகள் திங்கள் முதல் வெள்ளி வரை நேரம் மாலை 6 7/30 மணி ஆரம்பம் 12-2-90 S B Iyar 12, வைமன் வீதி நல்லூர். (2234)

### Toefl வகுப்புகள்

சனி ஞாயிறு நாட்களில் காலை 8.30-10 மணி S. B. Iyar 12, வைமன் வீதி, நல்லூர். (2235)

### கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் சிறுவர்களிலிருந்து அரசாங்க உத்தியோகத்தர் வரை (நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளை மையமாக வைத்து) ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. விபரங்கள் நேரில், ஜெயராசா கல்யாணி ஆங்கிலம் கல்வி நிலையம், 204, ஓட்டுமடம், யாழ்ப்பாணம். [2437]

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் ஆங்கிலம் சிறுவர்களிலிருந்து அரசாங்க உத்தியோகத்தர் வரை (நாளாந்த வாழ்க்கையில் ஏற்படும் நிகழ்ச்சிகளை மையமாக வைத்து) ஆங்கிலம் கற்பிக்கப்படுகிறது. விபரங்கள் நேரில் எஸ். ஜெயராஜா கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஓட்டுமடம், யாழ்ப்பாணம். (2437)

108 Brown Road A/L 90 இரசாயனம் ஆசிரியர் சத்தீஸ் ஆரம்பம்; 10-2-90 சனி 3.00 p.m சனி ஞாயிறு 3 p.m 6. p.m எல்லாப் பகுதிகளும் செய்யப்படும் பிரிவு 2 ஆரம்பம்: 12.02.90 திங்கள் 4 40p m திங், செவ், புதன், வெள்ளி 4.40 p.m - 615 p m எல்லாப் பகுதிகளும் செய்யப்படும்: (2457)

# கவின் கலைகளை வளர்க்க உலக தரிசனம் உதவி

## இயக்குநர் பீற்றர்பெரி உரை

குருநகர், பெப். 8

"தமிழ்க் கவின்கலைகளை வளர்ப்பதற்கு உலக தரிசனம் வழங்கும் உதவிக்காக நன்றி தெரிவிக்க வேண்டியதில்லை; உலக தரிசனம் உங்களது சிநேகிதனாக இருந்து உதவுகிறது".

குருநகர், நடன நல்லிசைக் கலாமன்றத்தின் 1990 ஆம் ஆண்டுக்கான முதல் இசை விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து பேசிய 'வேர்ல்ட் விஷன்' ஸ்ரீலங்கா இயக்குநர் திரு. பீற்றர் பெரி மேற்கண்டவாறு கூறினர்.

உலக தரிசனத்தின் யாழ்ப்பாணப் பிரதிநிதி திரு. பென்சுனாநிதம் இவரது ஆங்கில உரையை தமிழில் மொழி பெயர்த்தார்.

இந்த இசை விழா நிகழ்ச்சிகள் குருநகர் புனித யாகப்பர் ஆலய மண்டபத்தில் நடைபெற்றன;

பங்குத் தந்தையும், குருநகர் நடன நல்லிசைக் கலாமன்றத் தலைவருமான அருட் திரு: பி. எம். இம்மனுவேல் அடிகளாரின் தலைமையில் கூட்டம் நடைபெற்றது

பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்த உலக தரிசன ஸ்ரீலங்கா இயக்குநர் திரு: பீற்றர் பெரி மேலும் கூறினதாவது:

"உலக தரிசனத்திற்கு நன்றி செல்லும் பொழுது உலக நாடுகளில் இருந்து நிதி உதவி வழங்கிவரும் குடும்பங்களுக்குநன்றி சொல்கிறீர்கள்.

உலக தரிசன செயல்திட்டத்துக்கு உதவும் பணம் வங்கிகளில் இருந்தோ வேறெந்த நிதி நிறுவனங்களில் இருந்தோ வருவதில்லை; உங்களைப் போன்ற உழைக்கும் மக்களின் உதவியைக் கொண்டு தான் உலக தரிசன நிதி வளர்க்கப்பட்டு வருகிறது.

உலகதரிசன நிதியில் இருந்து தமிழ்க் கவின் கலைகள் வளர்க்கப்படுவதை அந்தந்த நாடுகளுக்குத் தெரிவிப்பேன்"

இவ்வாறு அவர் கூறினர்;

திரு. இ. டோறஸ் நன்றி கூறினர். (இ 51)


# கலை வர்த்தகக் கல்லூரி
## C. C. A

மணிக்கூட்டுவீதி, யாழ்ப்பாணம்.
(வெலிங்டன் சந்தி அருகே)

சனி, ஞாயிறு வகுப்புகள்

## A/L 90, 91

புதிய பிரிவுகள்

பொருளியல் - வரதராஜன்
வர்த்தகம் - ரட்ணம்
கணக்கியல் - ஸ்ரீ
அளவையியல் - S. S. மனோகரன்
தமிழ் - குழந்தை
இந்துநாகரீகம் - கிருஷ்ணா
புவியியல் - சண்

ஆரம்பம்: 10-02-1990
சனி 8.00 A. M

A/L 90 மீட்டல் வினா - விடை வகுப்பு

ஆரம்பம்: 10-02-1990
சனி 12.00 A. M

G. A. Q. B. A வகுப்புகள்
ஆரம்பம்: 10-02-1990 சனி

(C/3772)


# கேள்விப்பத்திர அறிவித்தல்

## பிரதேசக் கல்வித் திணைக்களம் கிளிநொச்சி
## கிளிநொச்சி மாவட்டப் பாடசாலைகளில் கட்டடத் திருத்த வேலைகள்

கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கான கேள்விகள் கல்வித் திணைக்களத்தின் கேள்விச் சபைத் தலைவரால் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி வியாழக்கிழமை (1990 - 02 - 22) காலை 11 மணி வரை ஏற்றுக் கொள்ளப்படும். கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள வேலைகளுக்கும் அதன் எதிரேயுள்ள தொகைக்கும் அல்லது அதனிலும் கூடிய தொகைக்கும் கட்டிட வேலை செய்வதற்கெனக் கல்வித் திணைக்களம், கட்டுவேலைத் திணைக்களம், நீர்ப்பாசனத் திணைக்களம், கட்டிடத் திணைக்களம் ஆகிய ஏதாவதொரு திணைக்களத்தில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களுக்கு 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 16 ஆம் திகதி வெள்ளிக்கிழமை (1990 - 02 - 16) வரை பிற்பகல் இரண்டு மணி (பி. ப. 2 மணி) வரை மீளளிக்கப்படாத கேள்விப் பத்திரப் பணமாக (ரூபா 50/-) ரூபா ஐம்பதும் மீளளிக்கப்படும் கேள்விப் பணமாக (ரூபா 250/-) ரூபா இரு நூற்றி ஐம்பதும் செலுத்தியதின் பேரில் கேள்விப் பத்திரங்கள் கிளிநொச்சிப் பிரதேச கல்வித் திணைக்களத்தில் வழங்கப்படும். கேள்விப் பத்திரப் பணம் கேள்வி வைப்புப் பணம் ஆகியன கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் செலுத்தப்பட வேண்டும். கேள்விகள் 1990 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதி (1990 - 02 - 22) வியாழக்கிழமை காலை 11.30 மணிக்குக் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். இச் சமயம் கேள்விக்காரர் சமூகமளிக்கலாம்.

தெரிவு செய்யப்பட்ட ஒப்பந்தகாரர்கள் இதுபற்றி அறிவிக்கப்பட்ட திகதியிலிருந்து 10 நாட்களுக்குள் ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட வேண்டும். தவறினால் மறு அறிவித்தலின்றித் தெரிவுகள் இரத்துச் செய்யப்படும்.

கேள்விப் பத்திரங்களுடன் இணைத்து வழங்கப்படும் வேலைக்கான கால அட்டவணைப்படியும் ஒப்பந்தப் பிரமாணங்களின் படியும் தவறாது வேலையைப் பூர்த்தி செய்து தரக் கூடியவர்கள் மட்டுமே இவ் வேலைக்கு விண்ணப்பிக்கலாம்.

பின்வரும் வேலைகளுக்காக என்னால் முன்பு கோரப்பட்ட கேள்விகள் அனைத்தும் இத்தால் இரத்துச் செய்யப்படுகின்றது. அவ் வேலைகளுக்கு ஏற்கனவே விண்ணப்பித்தவர்கள் மீண்டும் விண்ணப்பிக்க வேண்டுமென்பதையும் கவனத்திற் கொள்ளவும்.

மேலதிக விபரங்கள் கிளிநொச்சிப் பிரதேசக் கல்வித் திணைக்களத்தில் பாடசாலைக் கட்டிட வேலைப் பகுதியில் பெற்றுக் கொள்ளலாம்.

| பாடசாலையின் பெயர் | வேலை விபரம் | பதிவு செய்திருக்க வேண்டிய தொகை |
|---|---|---|
| 1. கிளி/முருகானந்த மகா வித்தி | பெருந்திருத்த வேலை | ரூபா 350,000 |
| 2. கிளி/முருகானந்த மகா வித்தி | 50'/25' மிதந்த மேல் மாடிக் கட்டிடம் | ரூபா 350,000 |
| 3. கிளி/உருத்திரபுரம் மகா வித்தி | பெருந்திருத்த வேலை 80'/20' புதிய கட்டிடம் அமைத்தல் | ரூபா 500,000 |
| 4. கிளி/ஸ்கந்தபுரம் இல. 2 அ. த. க. பாடசாலை | பெருந்திருத்த வேலை | ரூபா 100,000 |
| 5. கிளி/வன்னேரிக்குளம் மகா வித்தி | மேற்படி | ரூபா 100,000 |
| 6. கிளி/பரந்தன் அ. த. க. பா | மேற்படி | ரூபா 100,000 |
| 7. கிளி/பூநகரி நல்லூர் அ. த. க. பா. | மேற்படி | ரூபா 200,000 |
| 8. கிளி/செம்பன்குன்று அ. த. க. பா | மேற்படி | ரூபா 100,000 |
| 9. கிளி/பொன்னுவெளி சைவப்பிரகாச வித்தி | மேற்படி | ரூபா 100,000 |
| 10. கிளி/கிராஞ்சி அ. த. க. பா | மேற்படி | ரூபா 100,000 |
| 11. கிளி/கரியாலை நாகபடுவான் இல 8 அ. த. க. பாடசாலை | மேற்படி | ரூபா 100,000 |
| 12. கிளி/பல்லவராயன்கட்டு அ. த. க. பா. | மேற்படி | ரூபா 100,000 |
| 13. கிளி/தர்மபுரம் மகா வித்தி | 40'/20' புதிய கட்டிடம் அமைத்தல் | ரூபா 200,000 |
| 14. கிளி/குமுளமுனை அ. த. க. பா. | மேற்படி | ரூபா 200,000 |
| 15. கிளி/கனகாம்பிகைக்குளம் அ. த. க. பா. | பெருந்திருத்த வேலையும் 40'/20' புதிய கட்டிடம் அமைத்தல் | ரூபா 300,000 |
| 16. கிளி/வலைப்பாடு ஞுறு. த. க. பா. | மேற்படி | ரூபா 200,000 |
| 17. கிளி/சாமிபுலம் அ. த. க. பா. | பெருந்திருத்த வேலையும் 60'/20' புதிய கட்டிடம் அமைத்தலும் | ரூபா 300,000 |
| 18. கிளி/கரியாலை நாகபடுவான் இல. 2. அ. த. க. பா. | மேற்படி | ரூபா 300,000 |
| 19. கிளி/இரணைதீவு றோ. க. த. பாடசாலை | பெருந்திருத்த வேலையும் ஆசிரியர்களுக்கான புதிய விடுதி அமைத்தலும் | ரூபா 400,000 |

க. கந்தசாமி
பிரதிக் கல்விப் பணிப்பாளர்,
கிளிநொச்சி.

பிரதேசக் கல்வித் திணைக்களம்,
கிளிநொச்சி.
1990-02-06.

[சி-3364]


# கொம்பியூட்டர் கல்வி

Diploma in Computer Programming
& Data Processing
Basic Language
4 Months Weekdays

COMMENCEMENT - 12 - 02 - 1990

Fees Only Rs. 300/- Per month

* LECTURES By MEMBERS OF THE INSTITUTE OF DATA PROCESSING MANAGEMENT (London)
* PRACTICALS ON I B. M COMPATILES
* VALUABLE CERIFICATE
* தமிழிலும் விளக்கங்கள்

C. I. M A. I. A. B, Shorthand & Typing நடைபெறுகின்றன

SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Leaders in Computer Eduction)
16, 3rd CROSS STREET,
(West of O. L. R Church)
JAFFNA.

(C/3798)



# சீன சஞ்சிகைகளுக்கு சந்தா

1990 ஆம் ஆண்டுக்கான சீன சஞ்சிகைகளுக்கு சந்தா செலுத்தும் இறுதித் திகதி 15 - 02 - 1990 வியாழக்கிழமை என்பதனை புதிய பழைய சந்தாதாரருக்கு அறியத் தருகிறோம்.

தாமதியாது தொடர்பு கொள்ளவும்,

## வசந்தம் புத்தக நிலையம்

405, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[2258]


# ஓராண்டு நினைவஞ்சலி



செல்வி சண்முகலிங்கம் நிரஞ்ஜினி

பிறப்பு: 26-02-1982

இறப்பு: 19-02-1989

திதி:- 08-02-1990


அழகின் உருவமே அன்பின் பிறப்பிடமே நிரஞ்ஜினி நீ எங்கு சென்றாய் உன்னைக் காணாது ஓராண்டு ஓடி விட்டதம்மா.

என்றும் உன் பிரிவால் வேதனை கொள்கின்றோம்.

அப்பா, அம்மா, அக்கா, அண்ணன்மார்.

ஏழாலை மத்தி, ஏழாலை (2459)

# முதலாம் வருட நினைவஞ்சலி



தோற்றம்:- 14.02.1913

மறைவு:- 08-02-1989

அமரர் சோமசுந்தரம் நடராஜா

(முன்னாள் யாழ். மாநகரசபை சுகாதாரப்பகுதி உத்தியோகத்தர்)

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்;

குடும்பத்தினர்

கொட்டடி/நல்லூர், யாழ்ப்பாணம். (2253)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐரோப்பாவில் இருந்து படைகளை விலக்குக!

## வல்லரசுகளுக்கு செக். தலைவர் வேண்டுகோள்

பிராக், பெப் 7

ஐரோப்பாவில் இருந்து இரண்டு வல்லரசுகளும் தம் துருப்புக்களை உடனே விலக்கிக் கொள்ளவேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க வெளியுறவு அமைச்சர் ஜேம்ஸ் பேக்கருடன் நடத்திய பேச்சுக்களின் போது செக்கோஸ்லேவேகியா ஜனாதிபதி திரு. ஹேவல் இந்தக் கோரிக்கையை விடுத்தார்.

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஜனநாயக அலை வீசத் தொடர்ந்து அங்கு நிலைகொண்டுள்ள சோவியத் துருப்புக்களை உடனே விலக்கிக் கொள்ளும்படி அவை மாஸ்கோவை வற்புறுத்தி வருகின்றன.

அமெரிக்கா, ரஷ்யா ஆகிய வல்லரசுகள் தங்கள் படைகளை ஐரோப்பாக் கண்டத்தில் இருந்தே விலக்கிக் கொள்ள வேண்டும் என்று செக்கோஸ்லேவேகியா ஜனாதிபதி கோரியிருப்பது, அமெரிக்காவின் கவனத்தை ஈர்த்திருக்கிறது.

செக்கோஸ்லேவேகியா ஜனாதிபதி வருகிற வாரம் மாஸ்கோ செல்லவிருக்கிறார். அப்போது சோவியத் படைகள் துரிதமாக விலக்கப்படல்வேண்டும் என்று கிரெம்ளின் அதிகாரிகளை வற்புறுத்துவார். (ஏ)


## உடன் தேவை

"இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ் பிரிவு நடாத்தும் நடமாடும் சுகாதார சேவைக்கு பின் வரும் வெற்றிடங்களுக்கு தகைமையுள்ளவர்கள் நேரடியாக விண்ணப்பிக்கவும்.

1. வைத்திய அதிகாரி
2. சுகாதார போதனாசிரியர்
3. கிராமிய சுகாதார உதவியாளர்

விண்ணப்பங்களை நேரில் சான்றிதழ்களுடன் (பிரதிகளுடன்) எமது காரியாலயத்தில் 10-02-1990 க்கு முன் சமர்ப்பிக்கவும்.

**இலங்கை செஞ்சிலுவைச் சங்கம்,**
73, கண்டி வீதி, சுண்டிக்குளி,
யாழ்ப்பாணம்.

[சி 3363]


# கங்கை - காவிரி கூட்டாட்சிதான் புதுடில்லியில் நடைபெறுகிறது

## பழனி தேர்தல் கூட்டத்தில் கோபால்சாமி விழக்கம்

மதுரை, பெப்: 7

கங்கை சமவெளியும் காவிரி சமவெளியும் ஒன்றுபட்ட ஆட்சிதான் இன்று திரு. வி. பி. சிங் தலைமையில் நடைபெறுகின்றது.

தி. மு. க எம். பி திரு. வை. கோபால்சாமி பழனியில் தி. மு. க தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் பேசுகையில் முன் கண்டவாறு கூறினார்.

பழனி, ஒட்டன்சத்திரத்தில் இக்கூட்டம் நடந்தது.

திரு. கோபால்சாமி மேலும் சொன்னதாவது;

இன்றைக்கு இந்தியாவை தேசிய முன்னணி ஆட்சி செய்கிறது. அந்தத் தேசிய முன்னணியில் தி. மு. க அங்கம் வகிக்கிறது. இப்போது மத்திய அரசிடம் ஆண்டான், அடிமை என்ற பேதம் இல்லை.

கங்கை சமவெளியும் காவிரி சமவெளியும் ஒன்றுபட வேண்டும் என்று நம்முடைய வழிகாட்டி பேரறிஞர் அண்ணா கூறினார்.

அண்ணாவின் நோக்கம் இன்று நிறைவேறி விட்டது. கங்கை - காவிரி ஆட்சிதான் இப்போது மத்தியில் நடைபெறுகிறது.

மாநில சுயாட்சித் தத்துவம் வெற்றி பெற்றிருக்கிறது. தேசிய முன்னணி ஆட்சி நீடிக்குமா? என்று கேட்கிறார்கள். 1977இல் ஏற்பட்டது வேறு; 1989 நிலை வேறு;

அரசியலில் காங்கிரஸ் எவ்வளவு நாள் உயிருடன் இருக்குமோ அதுவரை தேசிய முன்னணி அரசும் இருக்கும்.

காங்கிரஸ் அரசுதான் இலங்கையில் அமைதி ஏற்படுத்தியது என்கிறார் ராஜீவ் காந்தி. என்ன அமைதி! சுடுகாட்டு அமைதி மயான அமைதி இவைகளைத்தான் ராஜீவ் இலங்கையில் ஏற்படுத்தினார்.

இலங்கைத் தமிழரின் பிரச்சினை தீர தமிழர் தலைவராம் கருணாநிதியிடம் திரு. வி. பி. சிங் பொறுப்பை ஒப்படைத்துள்ளார்.

போபர்ஸ் பேர ஊழலில், ஒரு வாதத்திற்கு ராஜீவ் லஞ்சம் பெறவில்லை என்று வைத்துக் கொண்டாலும் அவரின் பெயரைப் பயன்படுத்தி ராஜீவ் காந்தியை ஆட்டிப் படைக்கின்ற அச்சூத்திரதாரி யார்? அல்லது அந்தப்பெண் யார்? அவர்கள் பெயர் என்ன; இதையாவது ராஜீவ் காந்தி வெளியிட்டாக வேண்டும்.

இப்படி திரு. கோபால்சாமி தெரிவித்தார். (ஏ)

# உலகை பயமுறுத்தும் ஜேர்மன் இணைப்பு

## சோவியத் கம். கூட்டத்தில் எச்சரிக்கை!

மாஸ்கோ, பெப் 7

இரண்டு ஜேர்மனிகளும் இணைவது உலகிற்கு பொருளாதார, இராணுவ ரீதியில் பயமுறுத்தலாக அமையும்.

சோவியத் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டத்தில் இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டது.

அதிபர் கோர்பச்சேவின் அரசியல் சீர்திருத்தங்களை எதிர்த்துவரும் பொலிற்பீரோ உறுப்பினர் திரு. லிகோஷிச் இந்த எச்சரிக்கையை விடுத்தார்.

சோவியத் யூனியனிலும் பல கட்சி அரசியல் முறையை அமுலுக்குக் கொண்டு வரும் திரு. கோர்பச்சேவின் திட்டம் பற்றி விவாதிக்கவே கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய செயற்குழுக் கூட்டம் அழைக்கப்பட்டது.

கோர்பச்சேவின் திட்டத்திற்கு பழமைவாதிகள் கடும் எதிர்ப்புத் தெரிவித்தனர். இதன் காரணமாக கூட்டம் மூன்றாவது தினமாக இன்றும் நடந்தது. (ஏ)


கலைப்பிரியர்களே! நாடக ரசிகர்களே!!

## ஓர் அரியவாய்ப்பு!!

## புதிய வசதி!!!

வானொலியில் வாராந்தம் கேட்டு ரசித்த தொடர் நாடகத்தை ஒலிப்பதிவு நாடாவில் ஒரே தடவையில் கேட்கும் வாய்ப்பு

வானொலி நாடகம் நாடாவில் (கசெட்டில்)

வந்திருக்கும் புதிய வசதி

நடிகர் கே. எஸ். பாலச்சந்திரனின்

**கிராமத்துக் கனவுகள்**

(வானொலி நாடகம்)

இப்போது கசெட்டில் வெளிவந்திருக்கிறது;

மண்ணின் மணம் கமழும் படைப்பு
உங்கள் உள்ளங்களைக் கொள்ளை கொண்டது

தமிழ் வானொலி நாடகம் ஒன்று கசெட்டில் வந்திருப்பது இதுவே முதற்தடவை; இரண்டு மணி நேரத்தை நீங்கள் ரசித்துக் கழிக்க ஷப்ரு யுனிக்கோ பினுன்ஸ் நிறுவனத்தினர் கிராமத்துக் கனவுகள் நாடகத்தை கசெட்டாக வெளியிட்டுள்ளனர்.

**கிராமத்துக் கனவுகள்**
கசெட்

இப்போது யாழ்ப்பாணத்தில் அமோகமாக விற்பனையாகிக்கொண்டிருக்கிறது;

**விலை: ரூ. 95/-**

கிடைக்கும் இடங்கள்:

பொதுசனத் தொடர்பு அதிகாரி

● **நியு உதயன் பப்பிளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட்**
292/2, நாவலர் ரோட்,
யாழ்ப்பாணம்.

முகாமையாளர்

● **ஷப்ரு யுனிக்கோ பினுன்ஸ் லிமிட்டெட்,**
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.



உ

## ★ திருமண அழைப்பிதழ் ★

அன்புடையீர்!

நிகழும் சுக்கில வருடம் தைத் திங்கள் 28 ஆம் நாள் (10-02-90) சனிக்கிழமை காலை 7.00 மணிக்கும் 8.10 இற்கும் இடைப்பட்ட சுபவேளையில்

| எமது புதல்வன் | எமது புதல்வி |
|---|---|
| **செல்வன் நடேசன்** | **செல்வி சுந்தரகாந்தி** |
| அவர்களுக்கும் | அவர்களுக்கும் |

யாழ் அத்தியடி ஸ்ரீ சிதம்பர நடராஜ வீரகத்தி பிள்ளையார் கோவிலில் நடைபெறவிருக்கும் திருமண வைபவத்திற்கு உறவினர்களும், நண்பர்களும் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இங்ஙனம்,

திருமதி க. சாம்பசிவம்
[குடும்பத்தினர்]
காங்கேசன்துறை வீதி,
கொக்குவில்.

திரு. திருமதி பொன்சோமசுந்தரம்
[குடும்பத்தினர்]
57, அத்தியடி புது வீதி,
யாழ்ப்பாணம்.

(2450)


# தென் - வடகொரிய இணைப்பு உருவாக வியட்னும் யோசனை

சோல், பெப் 7

தென்கொரியாவின் ஜனாதிபதி மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்கள் ஒன்று சேர்ந்து புதிய அரசியல் கட்சி ஒன்றை அமைத்துள்ளனர்;

ஜனநாயக லிபரல் கட்சி என்று இந்த அமைப்பிற்கு தற்காலிகமாகப் பெயர் சூட்டப்பட்டுள்ளது;

கடந்த மாதம் 22 ஆம் திகதி எதிர்க்கட்சித் தலைவர்களான திரு. இம்-ஜங் சாம் கிம்-ஜோங்-பில் ஆகியோர் ஜனாதிபதி ரொட்ஸஜுவைச் சந்தித்துப் பேசினர். அதைத் தொடர்ந்து ஆளும் கட்சியுடன் தங்களின் கட்சிகள் இணைந்து புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்குவது என்ற முடிவை இரண்டு எதிர்க்கட்சிகளும் அறிவித்தன;

இதனிடையில், இரண்டு கொரியா நாடுகளும் சமாதான முறையில் இணைந்து கொள்ள வேண்டும் என்று வியட்னும் விருப்பம் தெரிவித்துள்ளது;

இரண்டு நாடுகளின் இணைப்பின்மூலம் புதிய சுதந்திர நாடு ஒன்றை உருவாக்க வேண்டும் என்று வியட்னும் அரசு மேலும் தெரிவித்தது. (ஏ)

## பழனி தேர்தல் பெப். 27 இல்

சென்னை, பெ. 7

தமிழ் நாட்டில் பழனி நாடாளுமன்றத் தொகுதிக்கான தேர்தல் இம்மாதம் 27 ஆம் திகதி நடைபெறுகிறது.

கடந்த நவம்பரில் நடந்த பொதுத் தேர்தலின் போது இத்தொகுதியில் தேர்தல் நடத்தப்படவில்லை. [illegible] ஒருவர் [illegible] (ஏ)


## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

## புதிய மாணவர்களைப் பதிவுசெய்தல்

## 1989 — 90

இப் பல்கலைக்கழகத்தில் 1989/90 ம் கல்வியாண்டிற்கான புதிய மாணவர்களைப் பதிவு செய்வதற்கான விபரங்கள் வருமாறு:-

மாணவர்கள் தமது பதவிற்கான பின்வரும் ஆவணங்களுடன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கைலாசபதி கலையரங்கில் கீழ்க் குறிப்பிட்ட திகதியின்படி நேரடியாகச் சமூகமளிக்கவும்;

1. பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அனுமதிப் பத்திரம்;
2. பிறப்புச் சான்றிதழ் (மூலப் பிரதி)
3. பாடசாலை விடுகைப் பத்திரம்.
4. போட்டோ பிரதிகள் 7 (பாஸ்போட் அளவு)
5. தேசிய அடையாள அட்டை

கட்டணங்கள்:

1. கலைப்பீட மாணவர்கள் பதிவுக் கட்டணமாக ரூபா 60/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
2. புவியியலை ஒரு பாடமாக எடுக்கும் கலைப்பீட மாணவர்களும், விஞ்ஞான மருத்துவபீட மாணவர்களும் பதிவுக் கட்டணமாக ரூபா 110/- செலுத்தும்படி வேண்டப்படுகிறார்கள்.
3. கைநூலுக்கான கட்டணம்:- மருத்துவம் ரூபா 20/-
   விஞ்ஞானம் ரூபா 15/-

| பயிற்சி நெறி | பதிவு செய்யும் திகதி | நேரம் |
|---|---|---|
| கலை | 26. 02. 90 | காலை 9.00 — 12. 00 |
| வர்த்தகம் / முகாமைத்துவம் | 27. 02. 90 | காலை 9 00 — 12. 00 |
| விஞ்ஞானம் பௌதிகம் | 28. 02. 90 | காலை 9.00 — 12. 00 |
| விஞ்ஞானம் உயிரியல் | 28. 02. 90 | மாலை 1.00 — 03. 30 |
| மருத்துவம் / விவசாயம் | 01. 03. 90 | காலை 9 00 — 12 00 |

மேற் கூறப்பட்ட திகதிகளில் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் பதிவு செய்யத் தவறியவர்களாகக் கருதப்படுவர்;

பதிவாளர்.

(இ/3365)



## வேலைவாய்ப்பு — லிபியா

| தொழில் | | சம்பளம் |
|---|---|---|
| டிகர்/லோடர் (JCB or CASE) | ஒப்பரேட்டர் | LD 92 |
| வீல் லோடர் | ” | LD 92 |
| ரக்சவேற்றர் | ” | LD 92 |
| கிரேடர் | ” | LD 92 |
| எக்சவேற்றர் | ” | LD 92 |
| மொபைல் கிரேன் | ” | LD 92 |
| ரிக்கர் (காஸ் + எலெக்ரிக் வெல்டிங்) | | LD 85 |
| கார் பெயின்ரர் | | LD 85 |
| மெக்கானிக்ஸ் (பெரும் வாகனங்கள் - டோசர், கிரேன் போன்றவை) | | LD 85 |
| வெல்டேர்ஸ் (காஸ் எலெக்ரிக் வெல்டிங்) | | LD 85 |
| மெஷினரி ஸ்டோர் கீப்பர் (கொம்பியூட்டர் தெரிந்தால் நல்லது) | | LD 110 |

ஒரு LD = US $ 3.3 = ரூபா 133: 00

சேவை நிபந்தனை: வயது 25 முதல் 50 வரை இரண்டு வருட ஒப்பந்தம் லீவு, ஓவர்டைம், காப்புறுதி என்பன லிபியா தொழில் சட்டங்களுக்கு ஏற்ப வழங்கப்படும்; தங்குமிடவசதி, மருத்துவம், உணவு வசதிகள் இலவசம்.

பாஸ்போட், 5 போட்டோக்கள், சான்றிதழ், சாரதி லைசென்ஸ் (ஒப்பரேட்டர்களுக்கு மட்டும்) களுடன் உடன் நேரில் வரவும்;

**இந்திராணி ஏஜென்சி**
இல. 18½ முதலிகே மாவத்தை,
கோட்டை, கொழும்பு - 1.

அனுமதிப் பத்திரம்:- 616
அங்கீகார இலக்கம்:- AL616/13/89 of 18-10-89

(2458)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NEW
SCIENCE ACADEMY
In Front of BMC Jaffna.
90 A/L
DAY CLASS
பிரிவு I
பிரிவு II
நடைபெறுகின்றது.

# உதயன்

NEW
SCIENCE ACADEMY
In front of B.M.C Jaffna
90 A/L
Weekend
PAPER CLASS
பிரிவு II
ஆரம்பம்: 10-2-90
SATURDAY - 7.30 a.m

8-2-1990 வியாழக்கிழமை

## எரிபொருள் நிரப்பும் கருவி மீற்றர் முத்திரையிடப்படும்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ் மாவட்டத்தில் முதற் தடவையாக எரிபொருள் நிரப்பும் கருவிகளின் மீற்றர்கள் முத்திரையிடப்பட இருக்கின்றன.

தென்மாகாணத்தில் 80 ஆம் ஆண்டு முதல் எரிபொருள் நிரப்பும் கருவிகளுக்கு முத்திரை இடப்பட்டு வருகிறது. ஆனால் யாழ் மாவட்டத்தில் இதுவரை அது அமுலாகவில்லை.

விரைவில் யாழ் மாவட்டத்தில் உள்ள பெற்றோல், மண்ணெண்ணெய் விற்பனை செய்யும் நிலையங்களில் உள்ள கருவிகள் முத்திரையிடப்பட இருப்பதாக உள்நாட்டலுவல்கள் திணைக்கள ஆணையாளர் தெரிவித்தார். (இ-3)

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

தற்காலிக செய்முறை காட்டுநர் மருத்துவபீடம்

பின்வரும் துறைகளில் ஓராண்டு காலத்திற்குச் செய்முறை காட்டுநர்களாக நியமிப்பதற்கு எம். பி. பி. எஸ் பரீட்சையில் சித்தி யெய்தியவர்களிடமிருந்து 1990 பெப்ரவரி 12 ஆம் திகதி வரை விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. உடலமைப்பியல்
2. உடற்றொழிலியல்
3. உயிரிரசாயனவியல்
4. சமூக மருத்துவம்
5. மருந்தியல்
6. சட்ட மருத்துவம்
7. நோயியல்
8. மருத்துவம்
9. அறுவை மருத்துவம்
10. குழந்தை மருத்துவம்
11. மகப்பேற்றியலும் மாதர் நோயியலும்

சம்பளம்: 3,250/- ரூபா

விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பதிவாளருக்கு அனுப்பி வைக்கவும்.

இப்பதவிகளுக்கான நேர்முகப்பரீட்சை இப் பல்கலைக்கழகத்தின் சபை அறையில் 1990-02-14ம் திகதி பி. ப 3.30 க்கு நடைபெறும் என்பதனைத் தயவு செய்து குறித்துக் கொள்ளவும். இந்த நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுமாறு விண்ணப்பதாரிகள் வேண்டிக் கொள்ளப்படுகின்றனர். விண்ணப்பதாரிகளுக்கு இந்த நேர்முகப் பரீட்சை தொடர்பாகத் தனித்தனியாகக் கடிதங்கள் அனுப்பி வைக்கப்படமாட்டா.

பதிவாளர்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1990-02-06
[சி-3800]

## யாழ். பல்கலை விவசாய பீடம்: 26 மாணவர் தெரிவாகினர்

யாழ்ப்பாணம், பெப் 8

1990 ஆம் ஆண்டுக்கு முதற் தடவையாக விவசாய பீடத்திற்கு 26 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

வைத்திய பீடத்துக்கு 95 பேரும், உயிரியல் விஞ்ஞானத் துறைக்கு 94 பேரும், பௌதீக விஞ்ஞானத்துறைக்கு 173 பேரும், தொழில் முகாமைத்துவத்துக்கு 101 பேரும், வர்த்தகத் துறைக்கு 144 பேரும் கலைத்துறைக்கு 135 பேரும் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

கடந்த வருடங்களிலும் பார்க்க கூடுதலான அளவு மாணவர்கள் இம் முறை தெரிவு செய்யப்பட்டுள்ளதாக பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன. (க-3)

## முத்திரையிடும் வேலை 12 இல்

யாழ்ப்பாணம், பெப். 8

கிளிநொச்சி மாவட்டத்தில் தராசுப் படிகளுக்கு முத்திரையிடும் வேலைகள் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் 28 ஆம் திகதி வரை நடைபெற உள்ளன.

தராசுகளுக்கு முத்திரையிடும்படி சகல வியாபாரிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (இ-3)

## நிறுவை...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஒப்படைத்து உதவும்படி மேற்படி திணைக்கள அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இவை பற்றி எவருக்காவது தகவல் தெரிந்தால் தெரியப்படுத்துமாறு திணைக்கள அதிகாரி வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ-3)

## வடமராட்சி...

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

தமிழீழ விடுதலைப் புலியினர் ஏற்றுள்ளனர்.

தற்போது வடமராட்சி கிழக்கிலுள்ள அரச அலுவலகங்கள் யாவும் ஐந்து தினங்களும் திறந்து சேவை புரிகின்றன.

வடமராட்சி கிழக்கில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் பிரதான காரியாலயம் மருதங்கேணி உதவிஅரசாங்க அதிபர் பணிமனையின் அருகாமையில் அமைந்துள்ளது. (இ-118)

## சட்டவிரோத மின்பாவனையால் மாநகரசபைக்கு பெரும் நஷ்டம்

### மின்சாரசபைக்கு செலுத்தவேண்டியது ரூபா 4 1/2 கோடி ஆனால் நிலுவையோ 2 1/4 கோடி மட்டுமே

யாழ்ப்பாணம், பெப் 8

'சட்டவிரோத மின்மானிகளைக் கையாளுதல் போன்றவற்றால் மின்சார விநியோகத்தில் யாழ் மாநகரசபைக்கு பெரும் நஷ்டம் ஏற்படுகிறது. இதனால் மாநகரசபை அபிவிருத்தி பாதிக்கப்படுகிறது'.

இப்படி யாழ் மாநகர சபையின் உயர் அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

யாழ் மாநகரசபை மின்சாரசபைக்கு மின்சார விநியோக வகையால் 4 கோடி 49 லட்சம் ரூபா செலுத்த வேண்டியுள்ளது. ஆனால் பாவனையாளர்களிடம் இருந்து பெறவேண்டிய நிலுவைத் தொகையோ 2 கோடி 30 லட்சம் தான்.

இந்நிலையில் மின்சார விநியோக வகையால் மாநகரசபை 50 சதவீத நஷ்டத்தை எதிர்நோக்கியுள்ளது.

சட்டவிரோத மின்பாவனை, மின்மானிகளைக் கையாளுதல் போன்றவற்றால் தான் இந்நிலை உருவாகியுள்ளது.

மக்களின் பொறுப்பற்ற இந்நடவடிக்கையால் மாநகர சபையில் அபிவிருத்தி வேலைகளே பாதிப்படைகின்றன என்பதை மக்கள் உணர வேண்டும் என்று தெரிவித்தார்.

கடந்த மாதம் மின்மானி மோசடியில் ஈடுபட்ட 25 தொழில் நிலையங்கள் அகப்பட்டன. அவர்களுக்கு தலா 2000 ரூபா அபராதமும் விதிக்கப்பட்டது.

சட்டவிரோத மின்பாவனையாளர்களுக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்பட இருக்கிறது.

இப்படி அந்த அதிகாரி மேலும் தெரிவித்தார். (இ-3)

## வர்த்தக நிலைய புதிய சட்டம்

### மாநகர நகரசபை கடைகளுக்கே பொருந்தும்

வர்த்தக நிலையங்களை காலை 10 மணிக்குத் திறந்து இரவு 10 மணிக்கு மூடுவது தொடர்பான சட்டம் மாநகரசபை மற்றும் நகரசபை எல்லைக்குள் அமைந்திருக்கும் வர்த்தக நிலையங்களுக்கு மட்டுமே பொருந்தும்.

இது தொடர்பான சட்டமூலம் ஏற்கனவே நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டிருந்தது தெரிந்ததே.

இந்த சட்ட விதியை அமுல் செய்வதற்கான வர்த்தமானி அறிவித்தல் இரண்டொரு தினங்களில் வெளியாகும் என கொழும்பில் அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன. (உ)

## 'றோ'வுடன் தொடர்பா?

கொழும்பு, பெப் 8

இலங்கையில் உள்ள எந்த அரசியல் குழுவுக்கும் 'றோ'வுடன் தொடர்புள்ளதா என்பது குறித்து இலங்கை உளவுச் சேவைக்குக் கிடைத்த தகவலை வெளியிட முடியாது என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின தெரிவித்தார்.

நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இத்தகவல் வெளியிடப்பட்டது. (இ-எ)

## வாகன லைசென்ஸ் பிரிவு விரைவில் இயங்கும்

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ் அரசாங்க செயலகத்தில் மோட்டார் வாகன லைசென்ஸ் பிரிவு ஓரிரு வாரங்களில் செயல்பட இருப்பதாக அரசாங்க செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

பலகாலமாக இத்திணைக்களம் மூடப்பட்டுள்ளதால் மக்கள் தம் வேலைகளைக் கொழும்பு சென்று செய்ய வேண்டியிருந்தது.

இத்திணைக்களம் இயங்கத் தொடங்கியதும் வாகன லைசென்ஸ், சாரதி லைசென்ஸ், வாகனப்பதிவு வேலைகள் நடைபெறும் என தெரிவிக்கப்பட்டது. (இ-3)

## 5வருட காலத்தின் பின்

### கிறிஸ்தவ சேமக்காலை மீண்டும் திறக்கப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 8

யாழ் கோட்டைக்குச் சமீபமாக உள்ள கொட்டடி கிறிஸ்தவ சேமக்காலை சுமார் ஐந்து வருட காலத்துக்குப் பின்னர் நேற்று முதற்தடவையாகப் பாவனைக்குத் திறந்துவிடப்பட்டது.

முன்னாள் தலைமை ஆசிரியர் கே. எஸ். திரவியம் என்பவரின் பூதவுடல் நேற்று அங்கு முதலில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

1985 முற்பகுதிக்குப் பின்னர் அச்சேமக்காலைக்குச் செல்லமுடியாத நிலைமை இருந்துவந்தது.

இந்திய அமைதிப்படையினர் கோட்டைக்கு வந்தபின்னரும் கண்ணிவெடி அங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற அச்சம் காரணமாக அங்கு எவரும் செல்லவில்லை. பின்பு அங்கு செல்லக்கூடிய சூழ்நிலையும் உருவாகவில்லை.

தற்போது சேமக்காலை துப்புரவு செய்யப்பட்டு பாவனைக்குத் திறந்துவிடப்பட்டுள்ளது.

வானளாவக் காட்சியளித்து வந்த பெரிய மரங்கள் பல தறிக்கப்பட்டுள்ளன. அங்குள்ள புதைகுழிகளில் எழுப்பப்பட்டுள்ள சின்னங்கள் சிதைக்கப்பட்டுள்ளன.

சிலர் தமது உறவினர்களின் புதைகுழிகளைக்கூட அடையாளம் காணமுடியாத நிலையில் இருந்ததைக் காணமுடிந்தது.

## கிழக்கு நிலைமை குறித்து விவாதம்

கொழும்பு, பெப். 8

கிழக்கு மாகாண நிலைமை குறித்து இன்று நாடாளுமன்றத்தில் விசேஷ விவாதம் ஒன்று இடம்பெறும்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ஜனாப் அஷ்ரப் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்தே இவ்விவாதம் நடத்தப்படுகிறது.

விவாதத்துக்கு 3 மணித்தியாலங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (இ-எ)

## காங்கேசன்——

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

திரா, ஆர். நடனசிவாமணி, ஏ. தில்லையம்பலம் ஆகியோரும், பருத்தித்துறை பிரஜைகள் குழு சார்பில் திரு எஸ். சாந்திதாசனும் விடுவிப்பு நிகழ்ச்சியில் பங்குபற்றினர்.

கடந்த மாதம் 15 ஆம் திகதி 7 பேரும், 20 ஆம் திகதி 3 பேரும், 23 ஆம் திகதி காலையில் 26 பேரும், மாலையில் 5 பேரும், 30 ஆம் திகதி 15 பேரும் உடுப்பிட்டி முகாமில் வைத்து வல்வெட்டித்துறை பிரஜைகள் குழுவினரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

இதுதவிர மேலும் ஒரு எண்ணிக்கையினர் மந்திகை முகாமில் விடுவிக்கப்பட்டு பருத்தித்துறை பிரஜைகள் குழுவிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விடுவிக்கப்பட்டவர்கள் உடனடியாக தத்தமது உறவினரிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றனர்.

இவர்களது பெயர் விபரங்கள் என்பன வல்வெட்டித்துறை, பருத்தித்துறை பிரஜைகள் குழு அலுவலகத்தில் மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளன.

இதே வேளையில் நேற்று மாலையில் மேலும் சிலர் விடுவிக்கப்படலாம் என சொல்லப்பட்டது. ஆயினும் செய்தி எழுதப்படும்வரை விடுதலை செய்யப்படவில்லை.

அடுத்த 3 தினங்களிற்குள் மேலும் 75 பேர் விடுவிக்கப்பட உள்ளனர் என்றும் அறிய வருகிறது.

தற்போது சுமார் 700 வரையான இளைஞர்கள் காங்கேசன் முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

தடுப்புக்காவலில் உள்ள— விடுதலைப் புலிகளின் முக்கிய தலைவர்களான ரஹீம், பஷீர் காக்கா, குட்ரன் ஆகியோர் விடுவிப்புக்காக காங்கேசனிலிருந்து வடமராட்சிக்கு அழைத்து வரப்பட்டனர் என்றும்— எனினும் இறுதி நேரத்தில் விடுதலை செய்யும் முடிவில் மாற்றம் செய்யப்பட்டதால் அவர்கள் திருப்பி அழைத்துச் செல்லப்பட்டதாகவும் கூறப்பட்டது. (உ-9)

## சர்வகட்சி....

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

றப் போவதில்லை என நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தது.

மாநாட்டில் பங்குபற்றுவதில்லை என்று முடிவு செய்ததற்கான காரணங்கள் பற்றி விளக்கமான அறிக்கை ஒன்றை ஐக்கிய சோஷலிஸ முன்னணி விரைவில் விடுக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இந்த மாநாட்டில் பார்வையாளர் மட்டத்தில் கூட கலந்துகொள்ளும் என ஏற்கனவே தகவல் வெளியாகியிருந்தது தெரிந்ததே. (உ)

## திருமலையில் மோதல்; 4 இளைஞர் மரணம்

கொழும்பு, பெப் 8

நேற்று முன்தினம் இரவு திருகோணமலை எல்லைப்புறப் பகுதியில் இடம்பெற்ற மோதலில் 4 இளைஞர்கள் இறந்தனர்.

ஈ. என். டி. எல். எவ். முகாம் ஒன்றின் மீது விடுதலைப் புலிகள் போராளிகள் நடத்திய தாக்குதல் சம்பவம் ஒன்றின் போதே இவர்கள் மரணமானதாக கொழும்பு அரசு அறிவித்திருப்பதாக பி. பி. சி. தெரிவித்தது.

பல தானியங்கித் துப்பாக்கிகள், ஆயுதங்கள் அச்சமயம் கைப்பற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

ஆனால் விடுதலைப் புலிகள் தரப்பு இச்சம்பவம் பற்றி தங்களிடம் தகவல்கள் எதுவும் இல்லை என்று தெரிவித்ததாக பி. பி. சி. மேலும் கூறியது.

## தனியார்-----

விடுதலைப்புலிகளின் வடமராட்சி அரசியல் பிரிவுப் பொறுப்பாளர் தினேஷ், யாழ் மாவட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர்செல்வி ரி. பெரியதம்பி மற்றும் கொத்தணி அதிபர்கள், உப அதிபர்கள், உதவியாளர்கள், கல்வி அதிகாரிகள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கலந்துரையாடலில் பின்வரும் விடயங்கள் பற்றியும் ஆராயப்பட்டது:

★ பாடசாலை ஆரம்பிக்கும் முடியும் நேரங்கள் ஒரு திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப்படவேண்டும். அந்த நேரம் 6 பணிநேரம் பாடசாலை இயங்கக் கூடியதாக அமையவேண்டும்.

★ அதிபர்கள் தமது பாடசாலை வளர்ச்சியில் உண்மையான விசுவாசத்துடன் கவனம் எடுத்தல் வேண்டும்.

★ பாடசாலைகள் மீதும், அதிபர்கள், ஆசிரியர்கள்மீதும் கல்வித் திணைக்கள அதிகாரிகள் தமது மேற்பார்வையாளர்களைத் திசைப்படுத்துதல் வேண்டும்.

★ பாடசாலை மேற்பார்வை ஒழுங்கான முறையில் மேற்கொள்ளவேண்டும்.

★ மாதாந்தம் பரீட்சைகளை வைத்தல்.

★ பாடசாலைக்கு ஒழுங்காகச் சமுகமளிக்காத அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள்மீது நடவடிக்கை எடுத்தல்.

★ ஆசிரியர்களின் ஒழுங்கமைக்கப்பட்ட முறையான ஆசிரியர் இடமாற்றத்திட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

★ பெற்றோருக்கும் மாணவர்களுக்கும் தனியார் கல்வி நிலையங்கள்மீது ஏற்படும் நாட்டத்துக்கான காரணிகளை அறிந்து அவற்றை நீக்குதல்.

★ பொதுப் பரீட்சைப் பிரிவு ஆணைப்பதிகாரி, நிரந்தர நோக்குனர், மேற்பார்வையாளர்கள், விடைத்தாள் திருத்துவோர் ஆகிய பதவிகளுக்கு குறிப்பிட்ட சிலரே வருடா வருடம் நியமிக்கப்படுகின்றனர். இந்த நிலையை மாற்றி கல்வித்திணைக்களம் நியாயமாகச் செயற்படவேண்டும்.

இவைபற்றி ஏனைய கோட்டங்களுடனும், அரசியல் பொறுப்பாளர்களுடனும் தொடர்புகொண்டு இந்த நடைமுறையை ஏனைய பகுதிகளுக்கும் விஸ்தரிக்க ஆராவு கோருவது என்றும் முடிவாகியது. (இ-9)

## இந்திய...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சில பிரிவுகள், குறிப்பாக இரண்டு பிரிவுகளின் போக்கு ஜனநாயக நெறிமுறைக்கு ஒவ்வாத வகையில் உள்ளது—

இப்படி திரு. வரதராஜப் பெருமாள் தமிழ் தேசிய சபையில் இருந்து ஈ. பி. ஆர். எல். எப் விலகியது பற்றி பிரஸ்தாபிக்கையில் சொன்னார்.

கடந்த சுமார் 8 வாரங்களாக இந்தியாவில் தங்கியிருந்த திரு. வரதராஜப்பெருமாள் தமிழகத்திலும், புதுடில்லியிலும் பல அரசியல் தலைவர்களையும் சந்தித்துப் பேச்சுக்கள் நடத்தியிருந்தார்.

## மரண அறிவித்தல்கள்

### V. மயில்வாகனம்

(சட்டத்தரணி)

அராலி வடக்கைச் சேர்ந்த சட்டத்தரணி மயில்வாகனம் காலமானார். அன்னார் காலஞ் சென்ற திரு. வல்லிபுரம், திருமதி வல்லிபுரம் தம்பதிகளின் அன்பு மகனும், சுலோஜினியின் அன்புக்கணவரும், அகிலா, சுகன், நிருபன் ஆகியோரின் அன்புத்தந்தையும், இளைப்பாறிய தலைமை ஆசிரியர் கந்தர் மயில்வாகனம், தவக்கொழுந்து தம்பதிகளின் அருமை மருமகனும், காலஞ்சென்ற சோமசுந்தரம், சிவசேகரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும், சிவஸ்கந்தா, விபுலஸ்கந்தா, ரமணஸ்கந்தா, தவஸ்கந்தா ஆகியோரின் மைத்துனருமாவர்.

ஈமக்கிரியைகள் இன்று (8-2-90) மாலை 3 மணி அளவில் அராலி வடக்கிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்
கந்தர் மயில்வாகனம்,
அராலி வடக்கு, அராலி.
(C/3801)

### திரு. ந. அரியரத்தினம்

(இளைப்பாறிய இலங்கை வங்கி உத்தியோகத்தர்)

மானிப்பாய் றோட், உடுவிலைச் சேர்ந்த திரு. ந. அரியரத்தினம் அவர்கள் 13-01-90 அன்று கொழும்பில் காலமானார். அன்னாரின் அஸ்தி நல்லடக்க ஆராதனை 10-02-90 சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று, உடுவில் சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

(C/3794) — குடும்பத்தினர்

Vacancies for Accounts Clerks, Accounts Trainees

Qualifications: G.C.E. (O.L.) with 5 Credits
G.C.E. (A.L) with 3 Subjects
Knowledge of English Typing
Experience (Accounts Clerks) at least 2 years
Candidates within 3 miles of Municipality given preperance
Applications close on 19-02-90

N. Karunai Ananthan & Co.,
Auditors & Accountants,
C/o. TAXMAN
Kannathiddy,
JAFFNA.
(C/3362)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 360/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 08-02-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org